## இடையிலிங்கர் ஆசியாவின்

# ஊடக அறிக்கை




ஆசியாவின் முதல் இடையிலிங்கர் மன்றமானது, “இடையிலிங்கர் மனித உரிமை நிதியுதவியின்” துணையால்  தாய்லாந்தின் பேங்காக் நகரில் 2018 பிப்ரவரி மாதம் 8-11 ஆகிய தேதிகளில் நடந்தது. இந்த மன்றத்தில் பங்குபெற்றவர்கள் “இடையிலிங்கர் ஆசியா”-வை உருவாக்கினர்.இது இடையிலிங்கர், அவர்தம்  சமூகங்கள் மற்றும் இயக்கங்களின்  உரிமைகளுக்காக உழைக்கும் முதல் ஆசிய மண்டலப் பிணையம் (நெட்வொர்க்) ஆகும். ஆசிய மனித உரிமைகள் சார்ந்த  இடையிலிங்க அமைப்புகள் மற்றும் இடையிலிங்க ஆர்வலர்கள் இணைந்து இந்தப் பிணையத்தை உருவாக்கினர்.

இந்தக் கருத்துக்களமானது ஹாங்-ஹாங் (சீனா), இந்தியா, இந்தோனேசியா, மியான்மர், நேபாளம், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், தைவான், தாய்லாந்து மற்றும் வியட்னாம் முதலிய நாடுகளின் இடையிலிங்கர் அமைப்புகள் மற்றும் சமூகங்களின் பதிலாட்களாகிய பதினான்கு இடையிலிங்கரை ஒருங்கே கொண்டுவந்துள்ளது.

**இடையிலிங்கர்-ஆசியா-வின் நோக்கங்களாவது: ஆசிய கண்டத்தில் வாழும் இடையிலிங்கரின் மனித உரிமைகள் உயர்வடையச்செய்தல் & பாதுகாக்கப்படல்; ஆசியக் கண்டத்தின் இடையிலிங்க மக்கள் & சமூகங்களின் குரலாக அமைதல்; இடையிலிங்கரின் வாழ்வுக்கான உரிமைகள் (உடலியல் இறையாண்மையும்/முழுமையும்- உடல் சார்ந்த சுதந்திரமும்- சுயதீர்மானம்) எங்கும் பாதுகாக்கப்படுதல் மற்றும் உயர்வடையச் செய்தல்.**

**இந்த இயக்கமானது ஆசியக் கண்டத்தின் இடையிலிங்க இயக்கத்தின் அச்சாணியாக உள்ளது எனலாம். ஏனெனில் ஆசியக்கண்டத்தில் இடையிலிங்கரின் மனித உரிமைகள் வெளிப்படுவதும் அங்கீகரிக்கப்படுவதும் வரலாற்றுத் தருணங்களாகும். இவற்றை “இடையிலிங்கர்-ஆசியா” நிச்சயமாகக் குறிக்கின்றது.**

தேவையற்ற மற்றும் மனிதாபிமானமற்ற மருத்துவ முறைகளான ‘இயல்பாக்குகின்ற’அறுவைசிகிச்சைகள்& மருத்துவமுறைகள் இடையிலிங்கரை ஆணாகவோ/பெண்ணாகவோ அவர்களின் முழு விருப்பமின்றி மாற்றுவதை நடைமுறைப்படுத்துகின்றன. இதற்க்கு இடையிலிங்க பச்சிளம் குழந்தைகள், இளம் பருவத்தினர் மற்றும் பெரியவர்கள் ஆளாகின்றனர். இத்தகுப் போக்குகள் இடையிலிங்கர் குறித்த விழிப்புணர்வு இல்லாமையால் பரவலாக நிகழ்த்தப்ப்படுகின்றன.

இடையிலிங்கத்தவர் இருமை பாலின அடையாளங்களான ஆண் மற்றும் பெண் என்னும் கருத்தோட்டத்தில் உள்ளடங்காதவர்கள். அவர்கள் வேறுபட்ட பாலினக் கூறுகள் உடைய பிறப்புறுப்புகள், இனப்பெருக்க உட்சுரப்பிகள் (கொனாட்கள்), ஊக்கிகள்(ஹார்மோன்கள்) மற்றும் இனக்கீற்று/நிறப்புரி பாங்குகள் (குரோமோசோம் பாங்குகள்) கொண்டுள்ளனர். இது குறித்த சரியானப் புரிதல் இல்லாததால் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டு பன்மடங்கான மனித உரிமை மீறல்களுக்கு (உடல் மற்றும் ஆரோக்கிய இறையாண்மை சார்ந்த உரிமை மீறல்கள், சித்திரவதை மற்றும் அன்பின்றி நடத்தப்படுதல், சமத்துவமின்மை, பாகுபாடு பாராட்டுதல்) ஆளாகின்றனர். நாம் வாழும் ஆசியசமூகத்தில் இடையிலிங்கதவர்களுக்கு எதிரான பாகுபாடுகள்,வன்முறைகள் மற்றும் கொலைகள் கலாச்சார&மதரீதியானப் பழமைவாதத்தை பாராட்டும் மருத்துவம் சார்ந்த நம்பிக்கை & பழக்கவழக்கங்களால் தொடரப்படுகின்றது.

இடையிலிங்கர் ஆசியாவானது ஒரு தன்னாட்சிப் பிணையம் ஆகும். இதில் உறுப்பினர்களாக ஆசியா நாடுகளில் இடையிலிங்கர்-நடத்தும் நிறுவனங்கள் மற்றும் ஆர்வமுள்ள இடையிலிங்கர் திகழ்கின்றனர். இடையிலிங்கரின் பிரச்சினைகள் குறித்து கல்வி புகட்டல் மற்றும் இடையிலிங்கர் எதிர்கொள்ளும் பாகுபாடுகள்-மனித உரிமை மீறல்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்ப்படுத்தல் ஆகியவை இவர்களின் செயல்பாடுகளாகும்.

ஆசிய இடையிலிங்கர் மன்றம் மற்றும் இடையிலிங்கர் ஆசியாவானது மால்டா பிரகடனம் (மூன்றாம் சர்வதேச இடையிலிங்கர் மன்றத்தின் பொது அறிக்கை ) மற்றும் இடையிலிங்கர் முன்-மாநாட்டின் (ILGA-ஆசியா 2017) இடையிலிங்கர் அறிக்கை ஆகியவற்றை நினைவுகூர்ந்து உறுதிப்படுத்துகிறது. இடையிலிங்கத்தவர்க்கு எதிரான பாகுபாடுகள் களையப்படவும், ஆசியாவில் இடையிலிங்கத்தவரின் மனித உரிமைகளை ஊக்குவிக்கவும் பாதுகாக்கவும், வாழ்வுக்கான உரிமைகள்-உடலியல் ஒருங்கிணைவு- உடல்மீதுள்ள சுதந்திரம் மற்றும் சுய-தீர்மானம் ஆகியவை உறுதிப்படுத்தப்படவும் உறுதி பூண்டுள்ளது. (தயவுசெய்து பொது அறிக்கையை காணவும் )

**பாங்காக், தாய்லாந்து, 11 பெப்ருவரி 2018**

## முகவுரை

நங்கள் இடையிலிங்கர் இருக்கின்றனர் என்றும் ஆசியா உட்பட உலகின் எல்லா பிரதேசங்களிலும் நாடுகளிலும் இருக்கின்றனர் என்றும் உறுதிப்படுத்துகிறோம். எனவே தம்சார்ந்த சமூக, அரசியல் மற்றும் சட்டரீதியான வரைமுறைமாற்றங்களில் இடையிலிங்கர் தாமே இயக்குநர்களாக அமையவேண்டும் என்பதை ஆதரிக்க வேண்டுகிறோம்.

பன்முகத்தன்மை கொண்ட இந்த ஆசியக் கண்டத்தின் பிரதிநிதிகளாய்த் திகழும்இடையிலிங்கர் ஆர்வலர்களான நாங்கள் பாகுபாட்டிற்கு முற்றுப்புள்ளி வைத்திடவும், இடையிலிங்க மக்களின் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வளர்ச்சியும் ஊக்கமம் அளித்திடவும் ஒன்றிணைந்து உழைக்கிறோம்.

## கோரிக்கைகள்

• இடையிலிங்கதவர்க்கு இழைக்கப்படும் துன்பங்கள் மற்றும் அநீதியினை ஒப்புக்கொள்ளச்செய்தல்.

• பாலினம் சார்ந்த பழமைவாதம், இடையிலிங்கரை நோயியல்மயமாக்கப்பட்ட விதத்தில் அணுகல் மற்றும் களங்கப்படுத்துதல் ஆகியவை குறிப்பிடத்தக்க மனச்சிதைவையும் மனநல குறைபாடுகளையும் உருவாக்குகின்றது என்பதனைக் கண்டுணரச்செய்தல்.

• இடையிலிங்கதவர் சார்ந்த எல்லா விதமான சமூகக்களங்கங்களிலும் தகுந்த மாற்றங்கள் கொண்டு வருதல்.

• இடையிலிங்கத்தவராக இருப்பதென்பது உயிரியல் ரீதியான பாலின கூறுகளை குறிக்கிறதன்றி ஒரு நபரின் பாலின ஈர்ப்பு அடையாளத்தையோ/ பாலின அடையாளத்தையோ குறிப்பதன்று என்பதை கண்டுணரச்செய்தல். ஒரு இடையிலிங்க நபரானவர் எதிர்பாலீர்ப்பு உடையவராகவோ ஒருபாலீர்ப்பு கொண்டவராகவோ (கே/லெஸ்பியன்) இருபாலீர்ப்பு உடையவராகவோ (பைசெக்சுவல்) அல்லது பாலீர்ப்பிலியாகவோ (ஏசெக்சுவல்-யாரிடமும் பாலீர்ப்பு உணரா அடையாளம் ) இருக்கலாம்; அவர்கள் தம் பாலின அடையாளத்தை ஆணாகவோ, பெண்ணாகவோ, இல்லை இவை இரண்டுமாகவோ அல்லது இவற்றில் இரண்டுமில்லாததாகவோ அடையாளப்படுத்திக்கொள்ள இயலும்.

• சட்ட ரீதியாக மற்றும் பிற வழிகள் மூலமாக, உடல் உறுப்புகளை சிதைக்கவும், ‘இயல்பாக்குதலையும்’ குறிக்கோளாகக் கொண்ட பிறப்புறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் & உளவியல் மற்றும் பிற மருத்துவ முறைகளை முடிவுக்கு கொண்டு வருவது. இடையிலிங்கத்தவர் தங்கள் சொந்த உடலின் இறையாண்மை - உடல்மீதுள்ள சுதந்திரம் மற்றும் சுய-தீர்மானம் ஆகியவை குறித்து அவர்கள் தாமே முடிவுகள் எடுக்கும் அதிகாரம் கொண்டவர்களாக உருவாக்கப்படுதல்.

• கரு-பதிப்பதற்கு(இம்ப்ளான்றேஷன்) முன் மரபியல் பரிசோதனைகள், பிறக்கும் முன் கருப் பரிசோதனையும் தேவயடற்ற தலையீடுகள், இடையிலிங்க சிசுக்களை தேர்ந்தெடுத்து கருவில் அழித்தல் போன்றவற்றை முடிவுக்கு கொண்டு வருவது.

• பொருந்தாத மருத்துவச் சிகிச்சை முறைகளான பாலினத் தேர்வுக்கான மருத்துவம், சிசுக்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகள் மீதான மருத்துவத் தலையீடுகள் முதலியவை இடையிலிங்க நபர்கள் மற்றும் அவர்களின் வகைகள் குறித்த சரியான விழிப்புணர்வு இன்மையால் தொடர்கின்றது. இவற்றை அறவே அகற்றுதல்.

• கட்டாயப்படுத்தப்பட்ட கருத்தடைக்கு இடையிலிங்கர் உள்ளாக்கப்படுவதை முற்றிலும் தடுத்தல்.

• இடையிலிங்கர் பாலினக் குணங்களில் உள்ள மாறுபாடுகள் உடையவர்கள். இதை உணராது அவற்றை நோயியல் குணாதிசயங்களாக பார்க்கும் மருத்துவ முறைகள், நெறிமுறைகள் மற்றும் வகைப்பாடுகளில் (எ.டு. உலக சுகாதார அமைப்பின் சர்வதேச நோயியல் வகைப்பாடு) தகுந்த மாற்றம் செய்தல்.

• பேறு காலத்திற்கு முந்தய ஆலோசனை சேவைகளில் இடையிலிங்கதவரின் மனித உரிமை சார்ந்த கல்வியினை அளித்தல்.

• இடையிலிங்கத்தவர் சிசுக்கொலை, கைவிடப்படுதல் மற்றும் கௌரவ-கொலைகளுக்கு ஆளாக்கப்படுவதை தடுத்தல்.

• இடையிலிங்கத்தவரை ஆண்களாக மாற்றம் செய்ய (குறிப்பாக மரபுரிமம்/வாரிசுரிமை பெறுவதற்காக) கட்டாயப்படுத்தும் முறைகளை தடுத்தல்.

• மலட்டுத்தன்மையைக் காரணம் காட்டி இடையிலிங்கர் வாரிசுரிமை பெறும் உரிமையை தடுக்கப்படுகின்றது. இதை முற்றிலும் தடை செய்தல்.

• இடையிலிங்க அமைப்புகள் & சக ஆதரவு அமைப்புகள் தகுந்த அங்கீகாரம் மற்றும் வளங்கள் பெறுவதை கிடைக்க ஆவன செய்தல்.

• பாகுபாட்டிற்கு எதிரானச் சட்டங்களில் பாலின ரீதியான பாகுபாட்டினையும் சேர்த்தல். இவ்வாறு இடையிலிங்கரை பொதுவான பாகுபாட்டிலிருந்தும் அனைத்து அடையாளரீதியான பாகுபாட்டிலிருந்தும் பாதுகாத்தல்.

• பாலியல் வன்முறையிலிருந்து இடையிலிங்கத்தவரை சட்ட ரீதியாக பாதுகாத்தல்.

• இடையிலிங்கத்தவருள் மாற்றுத்திறனாளிகளுக்கு சட்ட ரீதியான பாதுகாப்பு அளித்தல்.

• இடையிலிங்க அகதிகள் பாகுபாட்டிற்கு உள்ளக்கபடுவதை தடுத்தல். தகுந்த சமூக – உளவியல் உதவியை அளித்தல் .

• திருமணம் மற்றும் தத்தெடுப்பு முதலியவற்றில் சரிசமமான பாகுபாடற்ற சட்ட ரீதியான பாதுகாப்பினை அளித்தல்.

• வேலைபுரியும் இடங்களில் இடையிலிங்கர் பாகுபாட்டிற்கு உள்ளக்கப்படுவதை தடுத்தல்; இடையிலிங்கர், அவர்களின் குடும்பங்கள் மற்றும் சுற்றங்களுக்கு ஆதரவுமிக்க-பாதுகாப்பான-மகிழ்ச்சிமிக்க சூழல்கள் உருவாவதை உறுதி செய்தல்.

• இடையிலிங்கதவர் மற்றும் அவர்தம் குடும்பங்களுக்கு மனித உரிமை சார்ந்த கல்வியினை அளித்தல்.

• இடையிலிங்கருக்கு ஆதரவான சமூகங்களை உருவாக்கும் விதத்தில் இடையிலிங்கர் மற்றும் அவர்தம் குடும்பங்களுக்கு உறுதுணை அளித்தல்.

• இடையிலிங்கதவர் தம் சார்ந்த மருத்துவ அறிக்கைகள் மற்றும் மருத்துவ வரலாற்றினை எப்போதும் பெறும் விதத்தில் அமைவதை ஆவன செய்ததால்

• இடையிலிங்கத்தவரின் தனிநபர் சுதந்திரத்திற்கு மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் முதலிய சட்டம் மற்றும் சமூகம் சார்ந்த அமைப்புகளில் பாதுகாப்பு அளித்தல்.
இடையிலிங்கத்தவர் மனித உரிமை மற்றும் குடியுரிமம் சார்ந்த அனைத்து உரிமைகளும் கிடைப்பதை உறுதி செய்தல்.

• இடையிலிங்கதவரின் உடலியல் ஒருமையும் நலனும் பாதுகாக்கப்படும் விதத்தில் தனி நபர் சுதந்திரத்தை ஆவன செய்யும் இடையிலிங்கரை நோய் என்ற விதத்தில் நோக்காத சமூக-உளவியல் ஆதரவும் சக ஆதரவும் (தம் தேவைக்கேற்ப வாழ்நாள் முழுவதும்) இடையிலிங்கர்-அவர்தம் பெற்றோர் & பராமரிப்பு வழங்குநர்கள் பெறுவதை உறுதி செய்தல்.

• இடையிலிங்கதவரின் நலனை ஆவன செய்யும் மருத்துவர்கள் மற்றும் தகுதி வாய்ந்தோர் முறையான பயிற்சி பெற்றவராய் விளங்குவதை உறுதி செய்தல்.

• இடையிலிங்கதவரின் உடல் மற்றும் மனம் சார்ந்த மருத்துவ தேவைகளையும் பிரச்சனைகளையும் தீர்க்கும் விதத்தில் சரியான மருத்துவ வசதிகளை ஏற்படுத்துதல்.

• இடையிலிங்கர் குழந்தைகள் ஆண்/பெண் என்று தொடக்கத்தில் வகைப்படுத்தும் போது பிற்காலத்தில் அவர்கள் வேறு பாலினமாக அடையாளப்படலாம் என்ற முன்னுணர்வுடன் செயல்படுதல். மேலும் அவர்கள் தகுந்த வயதை எட்டியபின்னரோ/தகுந்த இளையவர்களாக இருக்கும் போதோ ஆண்/பெண்/பிற என்று தம்மை வேறு பாலினமாக அடையாளப்படும் நிலை ஏற்ப்படும். அப்போது சட்ட ரீதியாக சான்றிதழ்களில் மாற்றம் செய்யும் வழிமுறைகள் எளிய ரீதியில் அமையச்செய்தல்.

• ஆசிய இடையிலிங்கர் மன்றமானது வரும்காலங்களில் இனம்/ மதம்/பாலினம் ரீதியான அடையாளங்கள் ஒரு தனிமனிதனின் பிறப்பு மற்றும் அடையாளச்சான்றிதழ்களில் இன்றிமையாத இடம் பெறுவது மாற வேண்டும் என்று அறைகூவல் விடுக்கின்றது.

• மருத்துவ சேவை வழங்குநர்கள், இடையிலிங்கரின் பெற்றோர்கள், சமூக மற்றும் கல்வி சேவைகள் வழங்குநர்கள் அடிப்படையில் இடையிலிங்கர் குறித்த மனித உரிமைக் கல்விப் பெறச்செய்தல். இடையிலிங்கரின் அடிப்படை தனி மனித உரிமைகளையும் தன்மானத்தையும் பறிக்கும் பாலினம் உறுதிப்படுத்தும் சோதனைகளை தடை செய்தல். சட்ட ரீதியான பாலின அடையாளப்படி விளையாட்டுப்போட்டிகளில் பங்கு பெற செய்தல்.

• இடையிலிங்க-விளையாட்டுவீரர்கள் அவமானப்படுத்தப்படுதல் மற்றும் பதக்கங்கள் பறிக்கப்படுதல் முதலியவற்றால் அடைந்த வேதனைகளுக்கு தகுந்த பரிகாரம் அளித்தல். பறிக்கப்பட்ட பதக்கங்களையும் மீண்டும் அவர்களுக்கே அளிக்கச்செய்தல்.

• சமூகத்தில் இடையிலிங்கர் குறித்த விழிப்புணர்வை உருவாக்கல்.

• இடையிலிங்கத்தவர் மற்றும் அவர்தம் அனுபவங்கள் சார்ந்த விரிவான பாலியல் கல்வியினை அளித்தல். மனித உரிமைகள் சார்ந்த இடையிலிங்க கல்வியினை பெறும்படி செய்தல்.

• கடந்த காலத்தில் இடையிலிங்கத்தவற்கு இழைக்கப்பட்டத் கொடுமைகள் மற்றும் அநீதியினை ஒப்புக்கொள்ளச்செய்தல். மேலும் தகுந்த குறைநிவர்த்தி, பரிகாரம் , நீதிக்கான அணுகல் மற்றும் உண்மைக்கான உரிமை முதலியவை கிடைக்கும்படி செய்தல்.

**மேலே கூறப்பட்ட யாவற்றையும் கருத்தில் கொண்டு பின்வருவனவற்றை ஆசிய இடையிலிங்கர் இயக்கமானது அறைகூவல் விடுக்கின்றது:**

• சர்வதேச-பிராந்திய-தேசிய மனித உரிமை நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளில் இடையிலிங்கர் பிரச்சினைகளை எடுத்துக்கொண்டு அதற்க்கு தக்க காணுருவம் அளிக்கச்செய்தல்.

• ஆசிய இடையிலிங்கர் இயக்கம் எழுப்பும் கோரிக்கைகளை/பிரச்சனைகளை அரசுகள் தகுந்த முறையில் பதிலளிக்க செய்தல். மேலும் அவற்றிகான தீர்வுகளை இடையிலிங்க பிரதிநிதிகள் மற்றும் நிறுவனங்களின் ஒத்துழைப்போடு பரிந்துரைக்க செய்தல்.

• ஒவ்வொரு நாட்டின் அரசுகள் இடையிலிங்கருக்கு இழைக்கப்படும் தீமையான கலாசார பழக்கவழக்கங்களான சிசுக்கொலை மற்றும் கௌரவ கொலைகளை தடுக்க வகை செய்தல்.

• ஊடக நிறுவனங்கள் இடையிலிங்கரின் தனி மனித உரிமைகள், தன்மானம் & சரியான அறநெறி சார்ந்த வெளிப்பாடுகளை உறுதி செய்யும் வகையில் பங்கு பெற செய்தல்.

• சமூக தலைவர்களை இடையிலிங்கர் குறித்த கல்வியில் ஈடுபடச் செய்து இடையிலிங்கதவர் குறித்த தவறான கருத்துக்களையும் பாகுபாடுகளையும் களையச்செய்தல்.

• நிதியுதவி வழங்குபவர்களை இடையிலிங்கர் அமைப்புகளுடன் ஈடுபடச் செய்து, இடையிலிங்கரின் சமூக உரிமைக்கானப் போராட்டத்தில் பங்குபெற செய்தல்; இடையிலிங்கரின் திறனை வளர்த்தல். மேலும் அவர்களின் மனித உரிமைகளை உறுதி பெறச்செய்தல்.

• மனித உரிமை அமைப்புகள் இடையிலிங்க அமைப்புகளுடன் உறவுப்பாலமாய்த் திகழ்ந்து சக-ஆதரவும் அர்த்தமுள்ள ஈடுபாடும் கொள்ளச் செய்தல். இத்தகைய முயற்சியானது ஒத்துழைப்பின் அடிப்படையில் செய்யப்படவேண்டும். இடையிலிங்கர் பிரச்சனைகளை தம் சொந்த விருப்பங்களுக்காக/திட்டங்களுக்காக திருப்புவது இத்தகைய முயற்சிகளில் தடுக்கப்படவேண்டும்.

**மேலும் தகவல்களுக்கு அணுகவும்:** ஹைக்கர் சியு – தைவான்(சீன மொழி, ஆங்கிலம்) hiker@oii.tw; கோபி ஷங்கர் மதுரை – இந்தியா (ஆங்கிலம், தமிழ், மலையாளம், இந்தி) br.gopishankar@gmail.com, +918610539702, +919092282369, @gopishankarmdu; நடா சையஜித் – தாய்லாந்து (தாய் மொழி, ஆங்கிலம்) nada.chaiyajit@gmail.com; ஸ்மால் லுக் – ஹாங் ஹாங், சீனா (சீன மொழி , கான்டோனிய மொழி, ஆங்கிலம்) ivysmall@ymail.com, +85251996331 (வாட்சப்); எசன் ரேக்மி – நேபாளம் – (நேபாளி மொழி , ஆங்கிலம்) esanregmi@gmail.com, +977 9861336738

**இடையிலிங்கர் அறிக்கை ஒப்புகை- (தமிழ் மொழியில்):** முதல் ஆசிய இடையிலிங்கர் அறிக்கை மொழிபெயர்ப்புத் திட்டமானது இடையிலிங்கர் ஆசியாவால் தொடங்கப்பட்டு ஆர்.எப்.எஸ்.எல்- ஆல் நிதியுதவி வழங்கப்பட்டது. இடையிலிங்கர் ஆசியா கோபி ஷங்கர் மதுரை மற்றும் ஜாண் மார்ஷல் ஜே.எம் ஆகியோரின் உள்ளீடுகள், திருத்தங்கள் மற்றும் மொழிபெயர்ப்பு ஆதரவுக்கு நன்றி கூறுகின்றது

Produced by: intersex Asia

Allies: OII-Chinese

Our Sponsors: RFSL, Astraea Lesbian Foundation for Justice, mama cash